*86*

# "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #37*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*

H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*

5. *பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (மத். 26:58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54ஆ-62; யோவா. 18:15-18, 25-27).*
6. *யூதர்களால் "விசாரிக்கப்படுதல்" (மூன்றாம் நிலை): சனதெரீன் சங்கத்தாரால் தண்டனை விதிக்கப்படுதல் (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1; யோவா. 18:28).*
7. *ரோமர்களால் விசாரிக்கப்படுதல்:*
   a. *முதல் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (குற்றம் அறியாதவராகக் காணப்படுதல்) (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:2-7; யோவா. 18:28-38).*

### அறிமுகம்

இந்தப் பாடத்தில் நாம், இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகள் பற்றிய நமது படிப்பைத் தொடருகின்றோம். ஆளுநரான பிலாத்துவின் முன்னிலையில் கிறிஸ்து விசாரிக்கப்பட்டபோது, அந்த ஆளுநர் கூட்டத்தாரிடம், "... கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்?" என்று கேட்டார் (மத். 27:22). அந்தக் கேள்வியானது முதன்முதலில் ஒலிக்கப்பட்ட போது போலவே இன்றும் தகுதிவாய்ந்ததாகவே உள்ளது. இயேசுவைக் குறித்துக் கற்றுக்கொள்ளுகின்ற ஒவ்வொருவரும் அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தாக வேண்டும்.

அந்தக் கேள்விக்கு ஒரு சிலர் எவ்வாறு பதில் அளித்திருந்தனர் என்று நாம் ஏற்கனவே கண்டிருக்கின்றோம். எடுத்துக்காட்டாக, யூதாஸ் உண்மையில், "நான் அவரை விற்றுப்போடுவேன்!" என்று கூறினான். இன்றைய நாட்களில் சிலர் - புகழ், சந்தோஷம் அல்லது உடைமைகள் போன்ற சுயநல இலக்குகளுக்காக - இன்னமும் கர்த்தரை "விற்றுப்போட்ட"[1] குற்றத்தில் இருக்கின்றனர். சிலர் அவரை முப்பது வெள்ளிக்காசுகளை விடக்

கணிசமான அளவு குறைந்த தொகைக்கு "விற்றுப்" போட்டுள்ளனர்!

இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகள் பற்றிய நமது ஆய்வை நாம் தொடருகையில், "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு மற்றவர்கள் எவ்வாறு பதில் அளித்தனர் என்பதை அவ்வப்போது நான் குறிப்பிடுவேன். "கர்த்தரைக் குறித்து நான் என்ன செய்துள்ளேன்?" என்று ஒவ்வொரு நபரும் கேட்கும்படி அறைகூவல் விடுதலே எனது நோக்கமாக உள்ளது.

## பேதுருவின் மறுதலிப்பு
## *(மத். 26:56-58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54-62; யோவா. 18:15-18, 25-27)*

முந்திய பாடத்தில் நாம், தோட்டத்தில் இயேசுவின் ஜெபம், அவர் கைது செய்யப்படுதல் மற்றும் அவரை யூதர்கள் "விசாரணை" செய்ததின் முதல் படிநிலை ஆகியவற்றைப் பற்றிப் படித்தோம். இந்தப் பாடம் தொடங்குகையில், நாம் இயேசு கைது செய்யப்பட்ட நிகழ்ச்சிக்குத் திரும்புதல் அவசியமாக உள்ளது.

கிறிஸ்து கைது செய்யப்பட்டபோது, "சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத். 26:56). இருப்பினும், இயேசு இழுத்துச் செல்லப்பட்டபோது, பேதுருவும் யோவானும்,[2] அவரையும் அவரைப் பிடித்துக்கொண்டு போனவர்களையும், தூரத்திலே[3] பின்பற்றிச் சென்றனர், அந்த ஊர்வலம் பிரதான ஆசாரியரின் வீடு சென்று சேர்ந்தவரைக்கும் அவர்கள் இவ்வாறு பின்பற்றிச் சென்றனர் (மாற். 14:54; யோவா. 18:15; லூக். 22:54). பிரதான ஆசாரியரின் வீட்டாருக்கு அறிமுகமாகியிருந்த யோவான்,[4] முற்றத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டார் (யோவா. 18:15). சனதெரீன் சங்கம் கூடிய இடத்திற்கு நேர்கீழே அந்த முற்றம் இருந்தது (மாற். 14:65, 66ஐக் காணவும்). யோவானின் செல்வாக்கின் மூலமாக, பேதுருவும் அங்கு நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் (யோவா. 18:16, 17ஐக் காணவும்).[5]

அந்த முற்றத்தின் மையத்தில், குளிரை விரட்டுவதற்காக ஒரு சிறிய கரிநெருப்பு மூட்டப்பட்டிருந்தது (யோவா. 18:18; லூக். 22:55). அவ்விடத்திற்கு உரியவர்போன்று நடிக்க முயற்சி செய்த பேதுரு, இயேசு கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியின் "முடிவைப் பார்க்கும்படி" நெருப்பின் அருகில் அமர்ந்தார்[6] (மத். 26:58). அங்கு குளிர்காய்ந்து கொண்டிருந்தவர்களில், எஜமானரைக் கைதுசெய்திருந்த "அலுவலர்களும்" இருந்தனர் (மாற். 14:54; யோவா. 18:18).

முன்னதாக அன்று மாலை வேளையில் இயேசு, தமது சீஷர்கள் தம்மைக் கைவிட்டு விடுவார்கள் என்று முன்னுரைத்திருந்தார் (மத். 26:31). பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று மறுத்துரைத்திருந்தார் (மத். 26:33). அவருக்குக் கர்த்தர், "இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு[7] முன்னே, நீ என்னை

*மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று கவலையுடன் கூறியிருந்தார் (மத். 26:34).*

*மறுதலித்தல் எண் ஒன்றானது வருவதில் தாமதிக்காதிருந்தது.*[8] *பேதுருவை அனுமதித்திருந்த பெண் ஊழியக்காரி அவரிடம் வந்து, "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா?" என்று கேட்டாள் (யோவா. 18:17அ). அநேகமாக அவளுடைய சந்தேகமானது, அவர் யோவானுடன் இருந்திருந்த உண்மையினால் எழுப்பப்பட்டிருக்கும். பேதுரு விரைவாக, "நான் அல்ல" என்று கூறினார் (யோவா. 18:17ஆ), ஆனால் இது அந்தப் பெண்ணை திருப்தியடையச் செய்யவில்லை. அவள், "அவனை உற்றுப் பார்த்து" (லூக். 22:56அ), நெருப்பைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களிடம், "இவனும் அவனோடிருந்தான்" என்று கூறினாள் (லூக். 22:56ஆ). அவள் இந்த அப்போஸ்தலரிடம், ''நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய்" என்றாள் (மாற். 14:67; மத். 26:69ஐக் காணவும்). "அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது"; "ஸ்திரீயே, அவனை அறியேன்"; "நான் அறியேன்; நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது" (லூக். 22:57; மாற். 14:68) என்று "எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்" (மத். 26:70).*

*அப்போஸ்தலர் துரிதமாக நெருப்பு இருந்த இடத்திலிருந்து புறப்பட்டு வாசல் மண்டபத்தை நோக்கிச் சென்றார் (மத். 26:71), அங்கு முகப்பில் இருந்த நிழலில்*[9] *நிற்க முடியும் என்று அவர் நம்பினார் (மாற். 14:68).*[10] *இருப்பினும் அந்த இளம் பெண், அவரைத் தொடர்ந்து வந்து, "இவன் அவர்களில் ஒருவன்" என்று கூறினாள் (மாற். 14:69). வேறொரு பெண் ஊழியக்காரி, "இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான்" என்று கருத்தொருமைப்பட்டுக் கூறினாள் (மத். 26:71; லூக். 22:58அ). "அவனோ: 'அந்த மனுஷனை நான் அறியேன்' என்று ஆணையிட்டு,*[11] *மறுபடியும் மறுதலித்தான்" (மத். 26:72; லூக். 22:58ஆ-வைக் காணவும்). அது மறுதலித்தல் எண் இரண்டாக இருந்தது.*

*நாம், "பேதுரு இயேசுவை மறுதலித்தது ஏன்?" என்று கேட்க நிற்பது அவசியமாக உள்ளது. இந்த மீனவர் சுலபமாய்ப் பயமுறுத்தப்படக் கூடியவராக இருந்தவரல்ல. இவர் தோட்டத்தில் தமது வீரத்தன்மையை நிரூபித்திருந்தார். இவர் இயேசுவின் எதிரிகளால் சுற்றிச் சூழப்படக்கூடிய இடமான, அரண்மனை முற்றத்திற்கு வந்ததில் தமது தைரியத்தை(அல்லது குறைந்தபட்சம் தமது மடத்துணிச்சலை)ச் செயல்விளக்கப்படுத்தியிருந்தார். மேற்கண்ட கேள்விக்கு நாம் நிச்சயத்தன்மையுடன் பதில் அளிக்க முடியாது, ஆனால் பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: பேதுரு குழப்பமுற்று இருந்திருக்க வேண்டும்; அவர் சந்தேகத்துடன் போராடிக்கொண்டும் இருந்திருக்கலாம். இயேசு கைது செய்யப்பட, விசாரணை செய்யப்பட மற்றும் மரணத்திற்கு உட்படுத்தப்பட முடியும் என்ற கருத்தானது, மேசியாவைப் பற்றிய அவரது முன்னுருவான கருத்திற்குப் பொருந்தி வரவில்லை (மத். 16:22) என்பது ஒரு விஷயமாக இருந்தது. அவர் அநேகமாக, தமது பட்டயத்தைப் பயன்படுத்துவதற்கு, தமது எஜமானர் ஏன் அனுமதிக்காதிருந்தார் என்பதைப் புரிந்து உணர்ந்து கொள்ள முடியாதிருந்தார் என்பது (மத். 26:52) இன்னொரு விஷயமாக இருந்தது.*

*சாதாரணமாக, சுய உறுதிவாய்ந்தவராக இருந்த இம்மனிதர், அரண்மனை முற்றத்தினுள் நடந்து சென்ற வேளையில், இவர் ஊறுபடக்கூடியவராக, மிகவும் ஊறுபடக்கூடியவராக இருந்தார்.*[12]

*அப்போஸ்தலர் தனியே விடப்பட்டு ஒருமணி நேரம் கடந்திருந்தது, ஆனால் பின்பு, "வேறொருவன் அவனைப் பார்த்து: 'மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன்தான்' என்று சாதித்தான்." அதற்குப் பேதுரு: "மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன்" என்றான் (லூக். 22:59, 60அ). அருகில் நின்றிருந்த சிலர், "மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது'' என்று கூறிச் சேர்ந்து கொண்டனர் (மத். 26:73). கலிலேயர்களின் வட்டாரமொழி வழக்கு வித்தியாசமானதாக இருந்தது: தங்கள் வார்த்தைகளில் அவர்கள் குழறுவதோடு, பல எழுத்துக்களை ஒன்றுபோலவே உச்சரித்து, மற்ற எழுத்துக்களை உச்சரிக்காமல் விட்டுவிடுவார்கள். அந்தக் கூட்டத்தில், மல்குஸுக்கு உறவினன் ஒருவன் இருந்தான் (யோவா. 18:10ஐக் காணவும்). அவன், ''நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காண வில்லையா?" என்று கேட்டான் (யோவா. 18:26). பேதுரு, "அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்" (மத். 26:74அ).* NIV *வேதாகமம், "அவன் தன்னையே சபிக்கவும், அங்கிருந்த வர்களிடத்தில் ஆணையிடவும் தொடங்கினான்" என்று கூறுகிறது. அது மறுதலித்தல் எண் மூன்றாக இருந்தது.*

*இயேசு முன்னுரைத்திருந்தபடி - அவன் இப்படிச் சொன்னவுடனே "சேவல் கூவிற்று"*[13] *(லூக். 22:60ஆ; மத். 26:74ஆ; யோவா. 18:27ஆ-வைக் காணவும்). அந்த வேளையில், "கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார்" (லூக். 22:61அ). ஒருவேளை இயேசு ஒரு ஜன்னல் மூலமாகப் பேதுருவைக் கீழ்நோக்கிப் பார்த்திருக்கலாம். ஒருவேளை, அவர் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கூட்டிச் செல்லப்படுகையில், அவர் முற்றத்தைக்கடந்து சென்று, தமது பார்வையை அந்த அப்போஸ்தலர் மீது திருப்பியிருக்கலாம். கர்த்தருடைய பார்வையை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அது எத்தனை உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்: வருத்தம், இடித்துரைத்தல் ... ஆனால் அன்பும்கூட இருந்தது, எப்போதுமான அன்பு! இயேசு பேதுருவை நோக்கிப் பார்த்தபோது, அந்த அப்போஸ்தலர், "சேவல் கூவுகிறதற்கு*[14] *முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே ... நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான்" (லூக். 22:61ஆ, 62). காற்றினால் அடிபட்டிருந்த அவரது கன்னங்களின் வழியாகக் கண்ணீர் வழிந்தோடிற்று.*

*"இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு நாம் எப்போதாவது, ''நான் அவரை மறுதலிப்பேன்'' என்று கூறியிருக்கின் றோமா? கர்த்தருக்காகவும் அவரது வசனத்திற்காகவும் உறுதியாய் நிற்பதற்குப் பதிலாக, அமைதி காத்தல் என்பது சுலபமாக - மற்றும் பாதுகாப்பாக - இருந்த வசதியற்ற சூழ்நிலைகள் எதிலாவது நம்மை நாம் கண்டிருக்கின்றோமா?*[15] *இது ஒருபோதும் நடக்கமுடியாது என்று நினைக்*

காதீர்கள்; பேதுரு விழுந்துபோக முடியுமென்றால், நாமும்கூட விழுந்து போக முடியும் (1 கொரி. 10:12ஐக் காணவும்).

இருப்பினும், பேதுருவின் வரலாறானது, தோல்வியே முடிவானதல்ல என்பதையும் அறிவிக்கிறது. அதைப் பற்றி நாம் பிந்திய ஒரு பாடத்தில் அதிகமாய்க் கூறுவோம்.

## சனதெரீன் சங்கத்தின் பழிப்புரை (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1)

இப்போது நாம் இயேசு விசாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் விவரத்திற்குத் திரும்புவோம். நாம் இவ்வாறு செய்கையில், "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு நாம் இன்னொரு பதிலைக் கண்டறிகின்றோம். சனதெரீன் சங்கம் உண்மையில், ''நாங்கள் அவரைப் பழித்துரைப்போம்!" என்று கூறிற்று.

காய்பாவின் வீட்டில் சனதெரீன் சங்கம், இரவு நேரத்தில் கூடிய தென்பது சட்டவிரோதமானதாக இல்லாதிருப்பினும், முறையற்றதாக இருந்தது.[16] ஒரு புதிய நாள் நெருங்கிக் கொண்டிருக்க (மாற். 15:1அ; லூக். 22:66ஐக் காணவும்), "அலுவலக ரீதியான" ஒரு கூட்டத்திற்காக, இயேசு ஆலோசனைச் சங்கத்தின் அறைக்குள்[17] கூட்டிச் செல்லப்பட்டார் (லூக். 22:66).

ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினர்கள்[18] இரு மடங்கான நோக்கங் கொண்டிருந்தனர். முதலாவது, அவர்களுக்கு, இரவுவேளையில் தண்டனை விதிக்கப்பட்டதற்கான முறைசார்ந்த உறுதிப்பாடு தேவைப்பட்டது. அவர்கள் மீண்டுமாக இயேசுவிடம், "நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல்" என்று கேட்டனர் (லூக். 22:67அ; மத். 26:63ஐக் காணவும்). அவர், "நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள். நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள்"[19] என்றார் (லூக். 22:67ஆ, 68). LB என்ற வேதாகமப் பொழிப்புரையில், "... நீங்கள் என்னை நம்ப மாட்டீர்கள் அல்லது எனது வழக்கை முன்னிறுத்த என்னை அனுமதிக்க மாட்டீர்கள்" என்றுள்ளது. இருப்பினும் அடுத்ததாக, இயேசு தம்மை "மனுஷகுமாரன்" என்ற பட்டப்பெயரால் குறிப்பிட்டார் (லூக். 22:69).[20] தெய்வீகத்துவத்திற்கான இயேசுவின் உரிமைகோருதலைக் கேட்ட ஆலோசனைச் சங்கத்தார் பொங்கியெழுந்தார்கள்: "அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா?" (லூக். 22:70அ). அவர், "நான் அவர்தான்"[21] என்று பதில் அளித்தார் (லூக். 22:70ஆ). அவர்கள் இன்முகத்துடன், "இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன?[22] நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே" என்று வியப்புற்றுக் கூறினர் (லூக். 22:71).

இரண்டாவது விஷயம் ஒன்றும் தீர்க்கப்பட வேண்டியிருந்தது.[23] அவர்கள் இயேசுவைத் தேவதூஷணக் குற்றம்சாட்டி மரணத்திற்கு உட்படுத்தியிருந்தனர் (மத். 26:65, 66), ஆனால் அவர்களே அவருக்குச் சட்டப்படி தண்டனையை நிறைவேற்றக் கூடாதிருந்தது (யோவா. 18:31).[24] ரோம ஆளுநர், தேவதூஷணம் என்ற மதரீதியான குற்றச்சாட்டைப் பற்றி

அக்கறையெதுவும் எடுத்துக்கொள்ள மாட்டார் என்பதால், அவர்கள் அந்த அலுவலரின் மனதை ஈர்க்கக்கூடிய அரசியல்ரீதியான ஒரு குற்றச்சாட்டைக் கற்பனையாகப் புனைய வேண்டியதாக இருந்தது. இதை அவர்கள் செய்த பின்பு (லூக். 23:2ஐக் காணவும்), "அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைக் கட்டி கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்" (லூக். 23:1; மத். 27:2).[25]

"நாங்கள் அவரைப் பழித்துரைப்போம்" என்ற சனதெரீன் சங்கத்தின் பதிலானது இன்றைய நாட்களில் இன்னமும் கேட்கப்படுவது கவலைக் குரியதாக உள்ளது. ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினர்கள் போலவே, சிலர், இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்ற சாட்சியத் தைத் தீவிரமாகக் கருதுவதற்கு மனவிருப்பமற்று இருக்கின்றனர். அவர்களின் அவிசுவாசத்தில், அவர்கள் வேதாகமத்தில் அவரது வாழ்வு பற்றிக் காணப்படும் உண்மைகளை, கலிலேயாவில் இருந்து வந்த விவரண மற்ற, வறிய கல்வி பெற்ற, ஒரு நாடோடிப் பிரசங்கியார் என்ற அளவுக்கு வரும்வரை உரிந்துபோடுகின்றனர். அது போன்ற வண்ணமற்ற பண்புடைய ஒருவர் வரலாற்றின் ஓட்டத்தையே மாற்றக்கூடுமென்றால், அது தேவனை நம்பாதவர்கள் புறக்கணிக்கின்ற வேதாகமத்தின் அற்புதங்கள் எதைக் காட்டிலும் மாபெரும் அற்புதமாக உள்ளது! என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். நாம் யாவரும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நம்மில் எவரும் "நான் அவரைப் பழித்துரைப்பேன்" என்று கூறுவதினால் குற்றப்படாதிருக்கவும் நான் ஜெபிக்கின்றேன்.

## பிலாத்துவின் இக்கட்டான நிலை (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:1-7; யோவா. 18:28-38)

சனதெரீன் சங்கத்தின் பிரதிநிதிகள் இயேசுவைப் "பிலாத்துவினிடத் திற்குக்" கொண்டுபோனார்கள் (லூக். 23:1). பொந்தியு பிலாத்து யூதேயா (லூக். 3:1) மற்றும் சமாரியா முழுவதற்கும் அப்போதைய ரோம ஆளுநராக இருந்தார்.[26] ஒரு ஆளுநர் என்ற வகையில் சமாதானத்தைக் காப்பதும் ரோமாபுரிக்கு வரிவசூலிப்பதும் அவரது முதன்மையான கடமைகளா யிருந்தன. அவர், "மக்களின் சொந்த அரசாங்கத்தின் மூலம் - இவ்விஷயத்தில் சனதெரீன் சங்கத்தின்மூலம் - மரணதண்டனை பெற்ற எவரொருவருக்கும் மரண தண்டனையை அங்கீகரித்துச் செயல்படுத்துவித்தல்" என்ற ருசியற்ற பொறுப்பையும் கொண்டிருந்தார்.[27]

எருசலேமில் பிலாத்துவின் தலைமையகம்[28] இருந்த, "பிரட்டோரியம்" என்று அழைக்கப்பட்ட இடத்திற்குத் தலைவர்கள் இயேசுவைக் கூட்டிக் கொண்டு செல்லுகையில், அது இன்னமும் மிகவும் அதிகாலை[29] வேளையாக இருந்தது (யோவா. 18:28அ). "பிரட்டோரியம்" என்பது இலத்தீன் மொழி யிலிருந்து எடுக்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.

[இது தமிழ் வேதாகமத்தில் ''அரண்மனை'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.] இந்தச் சொற்றொடர், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ரோம ஆளுநரின் அலுவலகரீதியான வசிப்பிடத்தைக் குறிப்பிட்டது (அப். 23:35ஐக் காணவும்). ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, எருசலேமில் இருந்த பிரட்டோரியம் அந்தோனியா கோட்டையில் (இது அந்தோனியா அரண் என்றும் அறியப்பட்டிருந்தது) அமைந்திருந்தது, இது தேவாலய வளாகத்தின் வடமேற்கு மூலையில் அமைந்திருந்தது.[30] இன்றைய நாட்களில் சிலர், நகரத்தின் மேற்குப் பகுதியில் இருந்த மகா ஏரோதுவின் அரண்மனையில் பிலாத்து தங்கியிருந்திருப்பார் என்று நினைக்கின்றனர்,[31] ஆனால் இன்னும் மற்றவர்கள் இந்தப் பாரம்பரியமான இடத்தையே விரும்பிக் குறிக்கின்றனர். பாஸ்டியன் வேன் எல்டெரென் என்பவர், ''அங்கிருந்த இறுக்கமான சூழ்நிலையானது பிலாத்துவை, பஸ்கா வேளையில் நடைபெறும் செயல்களின் மையமான தேவாலயத்திற்கு அருகில் இருத்தலைக் கேட்டுக்கொண்டிருந்தன, இது இயேசுவை விசாரித்த போது பிலாத்து அந்தோனியோ கோட்டையில் இருந்தார் என்ற கருத்தை ஆதரிப்பதாக உள்ளது'' என்று கவனித்துள்ளார்.[32]

பிரட்டோரியம் என்பது புறஜாதியாரின் எல்லைப் பகுதியாக இருந்தது; யூத உயரதிகார வர்க்கத்தினர் "தீட்டுப்படாமல்[33] பஸ்காவைப் புசிக்கத் தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந் தார்கள்" (யோவா. 18:28ஆ). "பஸ்கா இராப்போஜனம்" முந்திய மாலை வேளையில் உண்ணப்பட்டிருந்ததால் (மத். 26:17-19; மாற். 14:12, 14, 16; லூக். 22:8, 11, 13, 15), இவ்விடத்தில் "பஸ்கா" என்று குறிப்பிடப்படுவது, எட்டுநாள் பண்டிகையின் தொடர்பாக உண்ணப்பட்ட மற்ற உணவு களைக் குறிப்பதாக இருக்க வேண்டும். மாய்மாலமான அந்தத் தலைவர் கள், குற்றமறியாத ஒரு மனிதனை ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தத் தயங்காதிருந்தனர், ஆனால் அவர்கள் "சடங்காச்சாரமான சுத்தமின்மை"யி னால் தங்களை இடர்ப்பாட்டிற்கு ஆளாக்கமாட்டார்கள் (யோவா. 18:28; NIV).

யூதத்துவப் பிரதிநிதிகள் ஒரு கைதியைக் கொண்டு வந்துள்ளனர் என்று பிலாத்து அறிந்தபோது, அவர்களிடத்திற்கு வெளியே சென்ற அவர், "இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்?" என்று கேட்டார் (யோவா. 18:29).[34] முதலில் யூதத்தலைவர்கள் தங்கள் வேண்டுகோளினால் மாத்திரமே, ஆளுநர், இயேசுவை, மரணத்திற்குத் தீர்ப்பிட வைக்க முயற்சி செய்தனர் (யோவா. 18:30). யூதர்களுடன் ஒத்துழைத்தல் என்பது பிலாத்துவுக்கு ஆர்வமுள்ள விஷயமாகவே இருந்தது, ஆனால் அது மிகவும் அதிகம் கேட்பதாக இருந்தது. பிலாத்து, "இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" என்று கூறியபோது (யோவா. 18:31அ), அவர் தமது கையை ஆட்டி யூதர்களைக் கலையச் செய்ததை என்னால் காணமுடிகிறது.

தலைவர்கள், ஆளுநரிடத்தில் இயேசுவைக் கொண்டு வரவேண்டி யிருந்தது ஏன் என்பதை விரைவிலேயே அவருக்குக் கூறினார்கள்: "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை''

(யோவா. 18:31ஆ). யூதர்களுக்குச் சில சலுகைகள் அனுமதிக்கப்பட்டிருந்தன, ஆனால் "வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் உரிமையை ரோம அரசு தன்னகத்தே தக்கவைத்திருந்தது."[35] இந்தச் சூழ்நிலையானது இன்னவிதமாய் இயேசுவின் மரணம் இருக்கும் என்ற அவரது வார்த்தைகளைச் சாத்தியமாக்கிற்று என்று யோவான் சுட்டிக்காண்பித்தார் (யோவா. 18:32). யூதர்கள் மரண தண்டனையைக் கல்லால் எறிந்து நிறைவேற்றப் பிரியப்பட்டனர் (அப். 7:58ஐக் காணவும்), ஆனால் ரோமர்கள், சிலுவையில் அறைதலை விரும்பித் தேர்ந்து கொண்டனர். ஆலோசனைச் சங்கத்தினர் இயேசுவைப் பிலாத்துவினிடத்தில் கொண்டு போனபோது, இயேசு புறஜாதியாரின் கைகளினால், சிலுவையில் அறையப்பட்டு மரிப்பதாக அவரே கூறிய முன்னுரைத்தலை, அவர்கள் அறியாமலேயே நிறைவேற்றினார்கள் (யோவா. 12:32-34; மத். 20:18, 19; மாற். 10:33, 34ஐக் காணவும்).

"மரணம்" என்ற வார்த்தையானது ஆளுநரின் கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும்; இந்த வழக்கானது மரணத்திற்குரிய குற்றத்தை உள்ளடக்கியிருந்தது. அவர் கிறிஸ்துவை இன்னும் நெருக்கமாகக் காண்பதை நான் மனக்காட்சியில் காண்கின்றேன். ஆளுநர் ஒருவேளை இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க வேண்டும்.[36] கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, அவர் (பிலாத்துவின் ஆளுகைப் பகுதியான) யூதேயா முழுவதிலும் இருமுறை விரிவாகப் பயணம் செய்திருந்தார்.[37] ஐந்து நாட்களுக்கு முன்பு அவர் ஆர்ப்பாட்டமாக எருசலேமுக்குள் பிரவேசித்திருந்தது - மற்றும் அதைத் தொடர்ந்து யூத அதிகாரிகளுடன் ஏற்பட்டிருந்த மோதல் ஆகியவை - நிச்சயமாகவே கவனிக்கப்படாமல் போயிருக்க மாட்டாது. பிலாத்துவினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த இராணுவப் படைகள், முந்திய இரவில் இயேசுவைக் கைது செய்ய உதவுவதற்குப் பணியமர்த்தப்பட்டிருந்தன. அந்த அதிகாரியின் சிந்தையில் ஓடிய எண்ணங்களை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "இம்மனிதன் யாராயிருக்கின்றான்?"

யூதத் தலைவர்கள், தாங்கள் திட்டமிட்டிருந்த மும்மடங்குக் குற்றச்சாட்டுகளைப் பிலாத்துவுக்கு முன்பாக அமைத்தனர்: "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப் படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்" (லூக். 23:2). இயேசு ஒரு ராஜாவாக இருந்தார் (மத். 2:2; 21:5; 27:11), ஆனால் இது ஒரு அரசியல்ரீதியான கருத்தின்படியல்ல, எனவே இந்த முறையீடுகளில் முதலாவதானது தவறாக வழிநடத்துவதாயிருந்தது, இரண்டாவதானது உண்மையற்றதாக இருந்தது (மத். 22:17-21) மற்றும் மூன்றாவதானது தெளிவற்றதாக இருந்தது. பின்னப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக இயேசு தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை - இது ஆளுநரை வியப்பில் ஆழ்த்தியது (மத். 27:12-14; மாற். 15:4, 5; ஏசா. 53:7ஐக் காணவும்).

பிலாத்து தமது அறைக்குள் சென்றார், இயேசு அவருக்கு முன்பாகக்

*கொண்டு வரப்பட்டார் (யோவா. 18:33அ). இயேசு தம்மை ராஜா என்று உரிமைகோரினாரா இல்லையா என்ற குற்றச்சாட்டுதான் ஆளுநரைக் கவலைப்படச் செய்தது. பிலாத்து, "நீ யூதருடைய ராஜாவா?" என்று கேட்டார் (மத். 27:11அ; யோவா. 18:33ஆ-வைக் காணவும்). இதற்குக் கிறிஸ்து உடன்பாட்டுக் கருத்தில் பதில் அளித்தார்: "நீர் சொல்லுகிறபடி தான்" (மத். 27:11ஆ; மாற். 15:2; 1 தீமோ. 6:13ஐக் காணவும்).[38]*

*பின்பு இயேசு பிலாத்துவிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்: "நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ?" (யோவா. 18:34). அவர் அநேகமாக, குற்றச்சாட்டின் ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்திக்கும்படி ஆளுநரிடம் கேட்டிருக்கலாம்.[39] இயேசு ரோமாபுரியின் அமைதிக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கின்றாரா இல்லையா என்பதை எவரொருவராவது அறியவேண்டு மென்றால், அவர் ஆளுநராகவே இருந்திருக்க வேண்டும். இதற்கு மறுபுறத்தில், இந்தக் குற்றச்சாட்டு யூதத்தலைவர்களிடம் தொடங்கி யிருந்தது என்றால், இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி சந்தேகப்பட வேண்டியதாக இருந்தது. சனதெரீன் சங்கமானது ரோமப் பேரரசின் நலனைக் குறித்து தனது அக்கறையுள்ள நிலையில் மிக அரிதாகவே அறியப்பட்டது.*

*குற்றச்சாட்டு யூதர்களிடத்திலிருந்து வந்தது என்பதைப் பிலாத்து ஒப்புக்கொண்டார், மற்றும் அவர் இயேசு யூதர்களை இவ்வாறு தூண்டும் படிக்கு, என்ன செய்திருந்தார் என்று விளக்கம் அளிக்கும்படி வற்புறுத்தி னார் (யோவா. 18:35). அந்தக் கேள்விக்குக் கிறிஸ்து பதில் அளித்தார், ஆனால் அவர் அந்த ரோம அதிகாரி புரிந்துகொள்ளும் வகையில் பதில் அளிக்கவில்லை. அவர், "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோவா. 18:36ஆ)[40] என்று கூறினார். அதுவே பிரச்சனையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது: இயேசு, யூதர்கள் எதிப்பார்த்திருந்தபடியாக, "இவ்வுலகத்தின்" அரசியல் ரீதியான, பட்டயம் சுழற்றும் அரசராக வந்திருந்ததில்லை, எனவே அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்தனர் (மத். 21:42).*

*இயேசுவின் இராஜ்யம் "இவ்வுலகத்திற்குரியதல்ல" என்பதற்கு அவர் நிரூபணம் கொடுத்தார்: "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" (யோவா. 18:36ஆ).[41] தடுமாறிய பிலாத்து, தமது கேள்வியை வேறு சொற்றொடர்கள் கொண்டு அமைத்துக் கேட்டார்: "அப்படியானால் நீ ராஜாவோ?" (யோவா. 18:37அ). கிறிஸ்து, "நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று பதில் அளித்தார் (யோவா. 18:37ஆ).*

*குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் நியாயாதிபதிக்கும் இடையில் நடந்த இந்தக் கருத்துப் பரிமாற்றத்தை பிலாத்துவுக்கு இயேசுவின் பிரசங்கம் என்ற*

வகையில் நினைத்துப் பாருங்கள்: ஆளுநர் தம்மை யார் என்று ஆழ்ந்து சிந்திக்கும்படியான ஒரு வேண்டுகோளாகவும், பிலாத்து தமது வாழ்வை மாற்றி, இரட்சிப்படைவதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருந்தது. ஆனால், உலகப்பிரகாரமான இந்த ஆளுநர் கவலை தரத்தக்க வகையில், "சத்திய மாவது என்ன?"[41] (யோவா. 18:38அ) என்று கேட்டுவிட்டு வெளியே சென்று விட்டார். பிரான்சிஸ் பேக்கன் என்பவர், "சத்தியமாவது என்ன? என்று வேடிக்கையாகக் கேட்ட பிலாத்து, ஒரு பதிலுக்காக அங்கு தங்கியிருக்க வில்லை" என்று எழுதினார்.[42]

இயேசு யார் என்பதைப் பிலாத்து அறியாதிருந்தார், ஆனால் அவர் [இயேசு] மரணத்திற்கு ஏதுவான குற்றம் எதையும் செய்திருந்ததில்லை என்பதை அவர் [பிலாத்து] அறிந்திருந்தார். ஆளுநர் வெளியே சென்று தமது தீர்ப்பை அறிவித்தார்: "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" (யோவா. 18:38ஆ). பிலாத்து, தமது தீர்ப்பானது இயேசுவின் விரோதிகளை அமைதிப்படுத்தும் என்று நினைத்தால், அவர் அவர்களைப் பற்றித் தவறாக கணித்தார் என்றே ஆகிறது. [இயேசுவின்மீது] கலகம் செய்தார் என்ற குற்றச்சாட்டை அவர்கள் வலியுறுத்தியபோது, அவர்களின் குரல்கள் உரத்தவையாகவும் காதுகளைத் துளைப்பவையாகவும் ஆகியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை: "இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்" (லூக். 23:5).

அவர்களின் கூக்குரலானது பிலாத்துவுக்கு இக்கட்டான நிலையை முன்னிறுத்திற்று. ஒரு புறத்தில், அவர் இயேசு "குற்றமற்றவர்" என்று அறிவித்திருந்தார், எனவே அவர் இயேசுவை உடனே விடுதலை செய்திருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. இதற்கு மறுபுறத்தில், அவர் யூதர்களை இன்னும் அதிகமாக பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. பிலாத்து இந்த இக்கட்டான நிலையில் அகப்பட்டது எப்படி என்று புரிந்துகொள்வதற்குப் பின்னணி விஷயங்கள் சிலவற்றை நாம் அறிவது அவசியமாகிறது. சமாதானத்தைக் காத்துக்கொள்ளுதல் என்பது ஆளுநரின் மிகமுக்கியமான கடமைகளில் ஒன்றாக இருந்தது, ஆனால் யூதேயாவில் பிலாத்துவின் நிர்வாகமானது, மோதல்கள், கலகங்கள் மற்றும் இரத்தம் சிந்துதலினாலும் கூட குறிப்பிடப்பட்டிருந்தது (லூக். 13:1ஐக் காணவும்). இன்னும் ஒரு பிரதான கலகம் என்பது அவர் ரோமாபுரிக்குத் திரும்ப அழைப்பித்துக் கொள்ளப்படுவதற்கு காரணமாகக் கூடும். ஆகவே - சாத்தியமானால் - யூதர்களை மகிழ்ச்சியுள்ளவர்களாகக் காத்துக்கொள்ளுதல் என்பது பிலாத்துவுக்கு அரசியல் ரீதியான உபாயமாக இருந்தது.

இயேசுவைக் குறித்து ஒரு முடிவை மேற்கொண்டு அதில் நிலைத் திருத்தல் என்பதைக் கடினமானதாகக் கண்டறிந்த முதல் மனிதனாகவோ அல்லது கடைசி மனிதனாகவோ பிலாத்து இருந்ததில்லை. இன்றைய நாட்களில் பலர், கர்த்தரைக் குறித்துத் தாங்கள் நிலைப்பாடு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று அறிந்திருந்தும், சரியானதைச் செய்யும் தைரியத்தில் குறைவுபடுகின்றனர். அவர்கள், குடும்பத்தை, நண்பர்களை அல்லது சகவேலையாட்களைப் பகைத்துக் கொள்ள மனவிருப்பம் இல்லா

*திருக்கின்றனர். இன்று எலியா உயிருடன் இருந்திருந்தால், தவறு செய்கின்ற இந்த மக்களிடத்தில் அவர் தமது அறைகூவலைப் பின்வருமாறு நீட்டித்து உரைப்பார்: "நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்? இயேசு கர்த்தரென்றால், அவரைப் பின்பற்றுங்கள்!" (1 இரா. 18:21ஐக் காணவும்).*

*இயேசு "கலிலேயா தொடங்கி" மக்களைக் கலகப்படுத்தினார் என்று யூதத் தலைவர்கள் சுட்டிக்காண்பித்திருந்தனர் (லூக். 23:5). அதைப் பிலாத்து கேட்டபோது, அவர் தமது இக்கட்டான நிலைக்கு ஒரு தீர்வைக் கண்டதாக நினைத்தார்: அவர் "இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து, அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்றறிந்து [லூக். 3:1ஐக் காணவும்], அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான்" (லூக். 23:6, 7). இருப்பினும் நாம் காணப்போகிறபடி, பிலாத்து தமது பிரச்சனையைத் தீர்த்து வைக்கவில்லை, அதை நீட்டித்திருக்க மட்டுமே செய்தார். "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியிலிருந்து தப்ப முடியாது.*

## *முடிவுரை*

*இந்தப் பாடத்தின் இரண்டாவது பகுதியில் நாம், இயேசுவை ரோமர்கள் விசாரணை செய்தது பற்றிய நமது படிப்பை நிறைவு செய்வோம், ஆனால் கிறிஸ்துவை எதிர்கொண்ட ஒவ்வொருவரும் அவரைக் குறித்துத் தாம் செய்ய வேண்டியதை முடிவு செய்ய வேண்டியிருந்தது என்ற உண்மையை மனதில் பதியச் செய்யப் போதுமான அளவு கருத்துக்களை நாம் கண்டுள்ளோம். இந்தப் பாடத்தை நாம் முடிக்கையில், நீங்களும்கூட ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று நான் உங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கின்றேன். நீண்ட காலத்திற்கு முன்பு, கிறிஸ்து பிலாத்துவின் முன்னால் நின்றார் - நீங்கள் அவரது வாழ்வைப் பற்றிப் படித்திருப்பதால், உண்மையில் அவர் இப்போது உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கின்றார். "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு இப்பொழுதே நீங்கள் பதில் அளிக்க வேண்டிய வேளையாக உள்ளது.*

*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*கேள்வி உங்களிடம் வருகிறது!*
*நீங்கள் அதற்கு பதில் ஒன்று தரவேண்டும்,*
*ஏதாவதொன்றை நீங்கள் செய்யவேண்டும்.*

*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*இது இரவும் பகலும் வருகிறது;*
*உயர்த்தப்பட்ட ஊடுருவப்பட்ட கரங்களுடன்*
*அவர் காத்திருக்கின்றார்[;] நீங்கள் கூறுவதென்ன?*

*அது என்னவாயிருக்கும்?*
*அது என்னவாயிருக்கும்?*
*உங்கள் பதில் என்னவாயிருக்கும்?*

*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*ஓ, உங்கள் பதில் என்னவாயிருக்கும்?*[43]

## குறிப்புகள்

பேதுரு இயேசுவை மறுதலித்தல் பற்றிய விவரமானது பல பிரசங்கங்களுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வாக்கெடுப்பின்படி, இந்த வரலாறு, வேதாகம மாணவர்களுக்கு மிகவும் பிரியமானதாக உள்ளது. பேதுரு கீழ்நோக்கிப் படியிறங்கிச் சென்றது, கர்த்தரை மறுதலித்தலை விளைவித்தது என்று காண்பித்தல் இந்த வரலாற்றிற்கான ஒரு அணுகுமுறையாக உள்ளது; இது அவர் மேல்நோக்கிப் படியேறி வந்ததினால் மறுபடியும் கட்டியெழுப்பப்பட்ட நிகழ்ச்சிகளுடன் நேரெதிராக ஒப்பிடப்படக் கூடும். பேதுருவின் மறுதலித்தலை யூதாஸின் காட்டிக் கொடுத்தலுடன் ஒப்பிடுதல் என்பது இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்தும் இன்னொரு வழிமுறையாக உள்ளது. பேதுருவின் மனந்திரும்புதல் (அவருக்கு மீட்பை விளைவித்தது), யூதாஸின் மனவருத்தத்துடன் (இது அவனது தற்கொலையை விளைவித்தது) நேரெதிராக ஒப்பிடப்படக்கூடும்.

---

குறிப்புகள்

[1]"கர்த்தரை விற்றுப்போடுதல்" என்ற சொல்விளக்கமானது இயேசுவைக் காட்டிலும் வேறு ஏதாவது அதிக முக்கியமானதாக (மதிப்புடையதாக) உள்ளது என்று நினைத்தலையும் கர்த்தருக்கும் அவரது சித்தத்திற்கும் முன்னதாக வேறு எதையாவது வைத்தலையும் குறிக்கிறது. அமெரிக்காவில் நாங்கள், "selling *out* someone" என்ற காட்டிக்கொடுத்தலை குறிப்பிடுகிற தொடர்புச் சொற்றொடர் ஒன்றையும் கொண்டுள்ளோம். [2]யோவான் 18:15-18ல் பெயர் குறிப்பிடப்படாத சீஷன், யோவானே என்று யூகிக்கப்படுகின்றார். [3]நம்மில், பிரசங்கிப்பவர்கள் பேதுரு "தூரத்தில்" பின்பற்றியிருக்கக் கூடாது என்று அடிக்கடி குறிப்பிட்டுள்ளோம். அநேகமாக, பேதுரு பின்பற்றியிருக்கவே கூடாது. இயேசு தமது பின்பற்றாளர்கள் தம்மைப் பிடிப்பவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்று சுட்டிக் காண்பித்திருந்தார் (யோவா. 18:8). [4]இவர் பிரதான ஆசாரியருக்கு அறிமுகமானவர் என்று யோவான் 18:15 கூறுகிறது; இவர் அந்த வீட்டாருக்கு அறிமுகமானவர் என்று வசனம் 16 சுட்டிக் காண்பிக்கிறது. ஒருவேளை யோவான், ஒரு வியாபாரப் பழக்கவழக்கத்தில் இந்த வீட்டாரை அறிந்திருக்கலாம். (கடந்த காலத்தில் அவர்களுக்கு இவர் நல்ல மீன்களை வழங்கியிருக்கலாம்.) அப். 4:5-7, 13 வசனங்களும், யோவானின் பின்னணி பற்றிய சில தகவல்களைக் காய்பா அறிந்திருந்தார் என்று சுட்டிக்காட்டுகின்றன. [5]முற்றத்தில் பேதுரு குளிர்காயச் சென்றபோது, யோவானுக்கு என்னவாயிற்று? ஒருவேளை, அந்த வீட்டாருக்கு யோவான் அறிமுகமானவராக இருந்தபடியினால், அவர் வீட்டினுள் அனுமதிக்கப்பட்டிருக்கலாம். அபாயத்தைக் கண்டு அவர் அங்கிருந்து சென்றிருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. [6]பேதுரு "நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்" என்று யோவான் 18:25 கூறுகிறது. அவர் சற்று நேரம்

நின்றுகொண்டும், பின்பு சற்று நேரம் அமர்ந்து கொண்டும் இருந்திருக்கலாம். [7]மாற்கு சுவிசேஷத்தின்படி, ''சேவல் இருமுறை கூவுமுன்'' என்று இயேசு கூறியிருந்தார் (மாற். 14:30). முரண்பாடு எதுவும் இருப்பதில்லை; மற்ற சுவிசேஷப் பதிவேடுகளில் உள்ள சேவல் கூவுதல் என்பது இரண்டாவது கூவுதலாக இருந்தது என்பது உறுதி. [8]மறுதலிப்புகளின் மிகச் சரியான வரிசை முறையை நாம் அறிவதில்லை. தொடருகிற எடுத்துரைப்பானது இவ்வரலாற்றை ஒழுங்கமைக்கும் ஒரு வழிமுறையாக உள்ளது. ஒவ்வொரு சுவிசேஷ விவரமும் மூன்று மறுதலிப்புகளையும் கூறுகின்றன, ஆனால் இவை யாவையும் ஒரே மறுதலிப்புகளைக் கூறுவதில்லை. அநேகமாக, ஒரே ஒரு மறுதலிப்பு என்று எண்ணப்படக்கூடிய பல மறுதலிப்புகள் துரிதமான வரிசையில் நடைபெற்றிருக்கலாம். [9]இது அநேகமாக கூரையிலிருந்து தொங்கும் முன்வளைவுகளைக் குறிப்பதாயிருக்கலாம். [10]மாற்கு 14:68ன் முடிவில், பிற்காலத்தியக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில், “அப்பொழுது சேவல் கூவியது” என்ற சொற்றொடர் கூட்டப்பட்டுள்ளது [தமிழ் வேதாகமத்தில் இவ்வாறே உள்ளது]. பேதுரு துன்புறுத்தப்படுதலின்போது இடைபாகம் ஒன்றில் ஏதோ ஒருவேளையில் சேவல் முதல்முறை கூவிற்று (மாற். 14:72ஐக் காணவும்).

[11]இந்த ''ஆணை'' என்பது அநேகமாக, நாம் வீணாக வழங்குதல் என்று அழைப்பதைக் குறிப்பிடுவதில்லை, ஆனால் யூதர்களால் பயன்படுத்தப்பட்ட முறைப்படியான ஆணைகளைக் குறிப்பிடுகிறது. அவர், தாம் கூறியது சத்தியமாக இருந்தது என்று ஆணையிட்டார். [12]சாத்தான் தொடர்ந்து அவரைப் “புடைக்கத்” தொடங்கினான் (இப்புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள “ஒருபோதும் மறக்கக்கூடாத இரவு” என்ற பாடத்தில் லூக். 22:31க்கான விளக்கவுரையை காணவும்). [13]மாற்கு சுவிசேஷத்தில், “உடனே, சேவல் இரண்டாந்தரம் கூவிற்று” என்றுள்ளது (மாற். 14:72அ). [14]மாற்கு 14:72ஆ-வில், “சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே ...” என்றுள்ளது. [15]கர்த்தரை மறுதலித்தல் பற்றி, மத்தேயு 10:33 மற்றும் 2 தீமோத்தேயு 2:12 ஆகிய வசனங்களைக் காணவும். [16]''உங்கள் தீர்ப்பு என்ன?'' என்ற தலைப்பிலான, இயேசுவின் விசாரணைகள் பற்றிய பிரசங்கத்தில் காணவும். [17]இயேசு இரவு வேளைக் கூட்டத்திற்குப் பின் ஆலோசனைச் சங்க அறைக்கு கூட்டிச் செல்லப்பட்டபடியால், அந்த அறையானது, பிரதான ஆசாரியரின் வீட்டில் இருந்து சற்றுத் தூரத்தில் இருந்தது என்பது தெளிவு. இருப்பினும், அந்த அறை மிகச் சரியாக எங்கிருந்தது என்பது குறித்து கருத்து வேற்றுமை நிலவுகிறது. கடந்தகாலத்தில், பெரும்பாலானவர்கள், இது தேவாலய வளாகத்தில் பெண்களின் மண்டபத்திற்கு அருகில் இருந்தது என்று நினைத்தனர், ஆனால் இப்பொழுது இது தேவாலயப்பகுதிக்கு வெளியில் இருந்தது என்று சிலர் நம்புகின்றனர். [18]“ஆலோசனைச் சங்கத்தாரனைவரும்” இருந்தனர் என்று மாற்கு குறிப்பிட்டார் (மாற். 15:1), இது நிக்கொதேமு மற்றும் அரிமத்தியாவூர் யோசேப்பு ஆகியோரை யும் உள்ளடக்கியிருக்க வேண்டும் (யோவா. 7:50; லூக். 23:50, 51). அவ்விரு மனிதர்களும் அங்கிருந்திருப்பார்களேயானால், அவர்கள் மறுப்புக் கூறிக் குரல் எழுப்ப ஒரு வாய்ப்புப் பெற்றிருந்தனரா? அல்லது அவர்கள் பேசுவதற்கு முன்பாகவே முழு விஷயமும் விரைவில் முடித்து வைக்கப்பட்டதா? நாம் அறிவதில்லை. [19]மேசியாவைப் பற்றிப் பழைய ஏற்பாடு கூறுவதென்ன என்பது பற்றியும், தமது சொந்த வாழ்வும் ஊழியமும் அந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியது எப்படி என்பது பற்றியும் கேள்விகளை அவர் கேட்டிருக்க முடியும். இருப்பினும் அவர்கள் பதில் அளிக்க மறுப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் (மத். 22:41-46அ). [20]“யூதேயாவில் உறக்கமின்மை” என்ற முன்புள்ள பாடத்தில் மத்தேயு 26:64ன் மீதான குறிப்புகளைக் காணவும்.

*[21]கிரேக்க வேத வசனத்தில், "நான் அவர்தான் என்று நீங்கள் கூறுகின்றீர்கள்" என்றுள்ளது, இது உறுதிப்படுத்துதலைச் சுட்டிக்காண்பிக்கும் எபிரெயச் சொல்விளக்கமாக உள்ளது. [22]ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் தீவிரமாயிருந்தனர், ஆனால் அவர்களின் கூற்றைப் பற்றி நகைச்சுவையான விஷயம் ஒன்றுள்ளது: அவர்கள் சாட்சி எதையும் கொண்டிருந்ததில்லை. இயேசு சாட்சியளிக்காதிருந்தால், அந்தக் காலைவேளையில் அவர்கள் சாட்சி எதையும் கொண்டிருக்க மாட்டார்கள். [23]வரலாற்றின் இந்தப் பகுதியில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அரசியல் ரீதியான குற்றச்சாட்டு ஒன்றை வடிவமைத்தல் என்பது ஆலோசனைச் சங்கத்தின் முன்னிருந்த பணியின் பிரதான விஷயமாக இருந்திருக்கலாம். இது அவர்கள் இயேசுவைப் பிலாத்துவின் முன்பாகக் கொண்டு போவதற்கு அவசியமானதாக இருந்தது. [24]பிற்பாடு, அவர்கள் ஸ்தேவானை, சட்டவிரோதமாகக் கல்லெறிந்து கொன்றனர் (அப். 6:8-7:60); ஆனால், இயேசுவின் விஷயத்தில் அவர்கள் சட்டபூர்வமாய்த் தோன்றுதல் என்பதைக் காத்துக்கொள்ள விரும்பினர். [25]சில ஒப்பீடுகள், யூதாஸின் தற்கொலையை சனதெரீன் சங்கத்தின் முறையான உறுதிப்பாட்டிற்குப் பின் உடனடியாக உள்நுழைக்கின்றன, ஏனென்றால் மத்தேயு சுவிசேஷத்தில் இவ்விடத்திலேயே இது வைக்கப்பட்டுள்ளது (மத். 27:3-10). இருப்பினும், இவ்வரலாற்றில் சில விவரங்கள், இது பிற்பாடு நடந்திருக்கலாம் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. எடுத்துக்காட்டாக, சனதெரீன் சங்கத்தார், பிரட்டோரியத்தில் பிலாத்துவுடன் விவாதிப்பதற்குப் பதிலாகத் திரும்பவும் தேவாலயத்திற்கு வந்தனர் (வ. 5). ஆகையால், எனது ஒப்பீட்டில், இவ்வரலாறு, பிலாத்து இயேசுவுக்கு மரணதண்டனை அளித்த பின்பு வைக்கப்பட்டுள்ளது. [26]பொந்தியு பிலாத்து [மற்றும் இயேசுவின் மரணம்] என்ற அடுத்த பாடத்தில் காணவும். [27]*F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1470. *[28]ரோம ஆளுநரின் பலஸ்தீனத் தலைமையகங்கள் செசரியாவில் இருந்தன (அப். 23:33ஐக் காணவும்), ஆனால் பிலாத்து, அடங்காத யூதர்கள்மீது ஒரு கண் வைத்திருப்பதற்காக யூதர்களின் பண்டிகை நாட்களின்போது எருசலேமுக்கு வந்திருந்தார். [29]சற்று நேரத்திற்குப் பின்பு, இயேசு பிலாத்துவின் முன்பு இருமுறையும், ஏரோதுவின் முன்பு ஒருமுறையும் கூட்டிக்கொண்டு போகப்பட்டிருந்த பிறகு, அது காலை சுமார் ஆறு மணியாயிருந்தது என்று யோவான் கூறினார். "எல்லாரும் விடையளிக்க வேண்டிய ஒரு கேள்வி" என்ற இனிவரும் பாடத்தில் (யோவான் 19:14ன் மீதான குறிப்புகளைக் காணவும்). சனதெரீன் சங்கத்தார் இயேசுவைப் பிலாத்துவினிடத்தில் அதிகாலைக்கு முன்பு அவசரமாய்க் கூட்டிச் சென்றிருக்க வேண்டும். [30]இப்புத்தகத்திலுள்ள "இயேசுவின் கடைசி மணிவேளைகளின் பாதைகளாகக் கருத்துத் தெரிவிக்கப்படுபவை" அடங்கிய எருசலேமின் வரைபடத்தை காணவும்.* மேலும், பாரம்பரியமான "துக்கத்தின் வழி" என்பது (Via Dolorosa) இந்த இடத்தில்தான் தொடங்குகிறது. யோசிப்பஸ் என்பவர் கோட்டையைப் பற்றி விளக்கியுரைக்கையில், "*அதன் நேர்த்தியான அமைப்பினால், அது ஒரு அரண்மனையைப் போலக் காட்சியளித்தது" என்று கூறினார்* (Josephus *Wars of the Jews* 5.5.8).

[31]The question regarding the place of Pilate's residence is discussed in John McRay, Archaelogy and the New Testament (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 114-19. [32]B. VanElderen, "Praetorium," *International Standard Bible Encyclopedia*, rev., gen. ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 114-19. மேலும், யூதப் பண்டிகைகளின்போது, கூடுதலாக ரோமப்படை வீரர்கள் செசரியாவில் இருந்து கொண்டுவரப்பட்டனர் என்பதைக் கவனிக்கவும். இவர்கள், தேவாலயப் பகுதியில் ஏற்படும் கலகங்களை அடக்கத் தயாராயிருக்கும் வகையில்,

சாதாரணமாக, அந்தோனியோ கோட்டையில்தான் முகாமிட்டிருந்தார்கள் (அப். 23:31-35). மத்தேயு 27:27ன்படி, ‘‘போர்ச்சேவகரின் கூட்டம்’’ முழுவதும் “பிரட்டோரியத்தில்” இருந்தது. இது, அந்தோனியோ கோட்டையே பிரட்டோரிய மாயிருந்தது என்று சுட்டிக்காண்பிக்கலாம். [33]புறஜாதியாரின் தங்குமிடத்தில் இருப்பதினால் தீட்டாகுதல் பற்றி, அப். 10:28ல் காணவும். பல யூதர்கள், பண்டிகையில் பங்கேற்கும்படிக்குத் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளுவதற்காக (யோவா. 11:55) ஒரு வாரம் முன்னதாகவே எருசலேமுக்கு வந்திருந்தனர். யூதத் தலைவர்கள், ‘‘சாதாரண’’ யூதர்களை விடத் தாங்கள் குறைவான உணர்வுடையவர்கள் என்று தோற்றமளிக்க விரும்பாதிருந்தனர். [34]ரோமர்கள் இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகளின் மிகச் சரியான வரிசை முறையை நாம் உறுதியாய்க் கூற இயலாது. இந்த வரிசை முறையானது சாத்தியமான ஒரு ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளது. [35]Theodor Mommsen, quoted in Bruce Corley, “Trial of Jesus,” *Dictionary of Jesus and the Gospels,* eds. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 850. யோவான் 18:31ஆ-வுக்கு, யூதரல்லாதவர் ஒருவர் தேவாலயத்தின் பரிசுத்த பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தால் என்பதே சாத்தியமான ஒரு விதிவிலக்காக இருந்தது. [36]பிலாத்துவின் மனைவியினுடைய வார்த்தைகள் (மத். 27:19), இயேசுவைப் பற்றிய சில முன்னறிவை மறைமுகமாக உணர்த்துகின்றன; பிலாத்துவின் மனைவி இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால், பிலாத்துவும் நிச்சயமாகவே கேள்விப்பட்டிருக்க வேண்டும். [37]பிந்திய கால யூதேய ஊழியத்தைப் பற்றி இப்புத்தகத்தின் துவக்கத்திலுள்ள ஒப்பீட்டில் காணவும். கலிலேயாவில் இயேசுவின் வெற்றியானது ஏரோதுவின் கவனத்தை ஈர்த்திருக்கும் (மத்.14:1; லூக். 9:7-9); யூதேயாவில் இயேசுவின் வெற்றியானது பிலாத்துவின் கவனத்தையும் ஈர்த்திருக்கும். [38]இயேசு, “அவை உமது வார்த்தைகளே தவிர, என்னுடையவைகள் அல்ல’’ என்று கூறியதாகச் சிலர் நம்புகின்றனர் ஆனால் அவரது பதிலானது, ‘‘ஆம்’’ என்று வெளிப்படுத்தும் நிலவரமான ஒரு எபிரெயச் சொல்விளக்கமாக இருந்தது. [39]யோவான் 18:34ல் இயேசுவின் கேள்வியானது பல்வேறு விளக்கங்களுக்கு இலக்காகியுள்ளது. இங்கு தரப்பட்டுள்ள விளக்கம் பெரும்பாலும் ஒத்துப்போவதாக உள்ளது. [40]இயேசுவின் ராஜ்யமானது, “இவ்விடத்திற்குரியதல்ல [அல்லது “இவ்வுலகத்திற்குரியதல்ல”] என்ற அவரது கூற்றானது, இயேசு பூமிக்குரிய ராஜ்யத்தை அமைக்க பூமிக்கு மறுபடியும் வருவார் என்று போதிக்கின்றவர்களின் கவலைக்குரிய ஆதாரமூலமாக உள்ளது. அவர்கள் இந்த எளிய கூற்றை விட்டு விலகியிருந்து விளக்கம் தர முயற்சி செய்கின்றனர்.

[41]பிலாத்துவின் கேள்வியானது, “வாஞ்சையான ஒரு விசாரணையாகக் கருதப் பட்டுள்ளது ... இந்த விசாரணையானது ... ஏளனம் செய்யும் ஒரு கேள்வியாகத் தளர்வடைந்தது ...” (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 707). அந்தக் கேள்வியைக் கேட்பதற்குப் பிலாத்து என்ன நோக்கத்தைக் கொண்டிருப்பினும், பதில் அளிக்கத் தகுதி வாய்ந்தவரிடமிருந்து எந்தப் பதிலையும் கேட்பதற்கு அவர் [பிலாத்து] அங்கு நிலைத்திருக்கவில்லை (யோவா. 17:17ஐக் காணவும்). [42]Francis Bacon, “Essays [1625], Of Truth,” quoted in *Bartlett’s Familiar Quotations, Expanded Multimedia Edition* (Time Warner Electronic Publishing, 1995). [43]John Robinson, “What Shall It Be?” *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).